முருகப்பெருமான் துணை

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.07.2022, செவ்வாய்கிழமை

1. பசிபிணி விரட்டும் உபாயமாக
பரோபகாரம் தனை விதைத்து
ஆசிதந்து காக்கும் ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது மிதுன திங்கள்
குறைவிலா மூவேழுதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 21 நாள், 05.07.2022 செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு ஐயடிகள் காடவர்கோன் நாயனார் யானும்
3. யானுமே உலகோர் வளமுற உரைப்பேன்
ஓங்காரன் வழிபாடு எங்கும்
ஞானமாகப் பரவி மக்களிடை
நல்லாற்றல் தந்து வர
4. வருகவே வழிபாடு தன்னை
வரமாக ஏற்று மக்கள்
முருகா எனும் செபதபமாக
முழுமைபட நாளும் செய்துவர
5. செய்துவர சிந்தை தெளிவு
செய்துவர சிறப்பறிவுடன்
அய்யமிலா ஞான வாழ்வு
அரங்கனால் அடைவோம் எனும்
6. எனும் நம்பகம் பெருகி
இடைவிடா பூசை முறை
தானாகத் தொடர்ந்து நன்கு
தவபலமாக மக்கள் அடைவர்
7. அடையவே மாற்றம் தன்னை
அரங்கன் வழி ஆறுமுகனார்
தடையற ஆசியாக தீட்சையாக
தரணியோர்க்கு இறங்கி காப்பார்
8. காப்பான அரங்கன் செயல்
கருணைமிக்க அரங்கன் தருமம்
ஒப்புகொண்டு உலகம் ஏற்க
ஓங்கார நாதம் எங்கும் முழங்க
9. முழங்கவே தீவினை ஓடும்
முழுமைபட ஞானவான்களை
களங்கமற படைத்து நன்கு
கலிவேகம் யாவும் விலகும்

10. விலகவே பாதுகாப்புக் கூடி
வேலவன் அருளாசிபெற்ற
உலகமக்களாய் மாறியே
உயர்வான ஞானத் தலைமை

11. தலைமைதனை உலகு கண்டிடும்
தக்கஞான ஆட்சி மலரும்
ஊழலில்லா ஞானசித்தர் காலமாகும்
உரைத்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–